தினமணி

# வேளாண் தொழில்நுட்ப உதவியாளர் பணி: விண்ணப்பம் வரவேற்பு

First Published : 13 Jul 2012 09:00:18 PM IST

கடலூர், ஜூலை 13: வேளாண் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக வேளாண்மை இணை இயக்குநர் எம்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2012-2013-ம் ஆண்டுக்கு ஊட்டச்சத்து பாதுகாப்பின் வழியாக தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டத்தின்கீழ் ஒப்பந்த அடிப்படையில் வேளாண் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு பணி நியமனம் செய்ய தகுதி உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எம்.எஸ்ஸி அல்லது பி.எஸ்ஸி (விவசாயம்) பட்டயப் படிப்பு படித்திருக்க வேண்டும், இவர்கள் விண்ணப்பிக்காத நிலையில் பி.எஸ்ஸி (அறிவியல்) பட்டப்படிப்பு முடித்தவர்களோ, பட்டயப் படிப்பு (விவசாயம்) ஓய்வுபெற்ற பி.எஸ்ஸி., (விவசாயம்) நபர்களின் விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இரண்டு பணியிடங்கள், ஆகஸ்ட் 2012 முதல் ஜனவரி 2013 வரை பணி காலம். மாதம் ரூ.8 ஆயிரம் தொகுப்பூதியம் வழங்கப்படும். வேளாண்மை இணை இயக்குநர், செம்மண்டலம், கடலூர் என்ற முகவரிக்கு 25.7.2012-குள் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினகரன்

## வெள்ளாடு வளர்க்க இன்று பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-13 12:35:42

காஞ்சிபுரம், : வெள்ளாடு வளர்க்க ஏனாத்தூரில் இன்று இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுகுறித்து உழவர் பயிற்சி மையம் தலைவர் வெங்கட சுதாகர் ராவ் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் அருகே உள்ள ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையம் சார்பில் வெள்ளாடு வளர்ப்பு ஒருநாள் இலவச பயிற்சி முகாம், ஏனாத்தூரில் உள்ள பயிற்சி மையத்தில் இன்று நடக்கிறது. இதில் விவசாய மக்கள் பயிற்சி பெறலாம். நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ தங்களது பெயர்களை பதிவு செய்து பயன் பெற லாம்.

முகவரி: தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத் தூர், காஞ்சிபுரம், 631561, தொலைபேசி 044-27264019. இவ்வாறு அறிக்கையில் கூறி உள்ளார்.

## சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன கருவிகள் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் கலெக்டர் தகவல்

பதிவு செய்த நேரம்:2012-07-14 10:58:30

திருவண்ணாமலை, :திருவண்ணாமலை மாவட்டத்தில் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகள் அமைக்க சிறு, குறுவிவசாயிகளுக்கு 100 சதவீதம மானியம் வழங்கப்படும் என கலெக்டர் விஜய்பிங்ளே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

திருவண்ணாமலை மாவட்டத்தில், வராகநதி, துரிஞ்சலாறு, ஓங்கூர் மற்றும் செய்யார் கிளியார் உபவடி நிலப்பகுதிகளில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நீர்வளத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நுண்ணீர்ப் பாசனம், பண்ணைக்குட்டை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில்(2012-2013) மாவட்டத்திற்கு. நுண்ணீர்ப்பாசனம் செயல்படுத்திட 200 ஹெக்டேருக்கு ரூ.70 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் செய்யார் கிளியார் உபவடி நிலப்பகுதிகளில் 28 பண்ணைக்குட்டைகள் ரூ.14 லட்சம் நிதியில் அமைக்க இலக்கு நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது.

நுண்ணீர்ப்பாசன திட்டத்தின்கீழ் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனக்கருவிகள் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும்(தலா ரூ.43,816 வரை) இதர விவசாயிகளுக்கு 75 மானியமும்(தலா ரூ.6,043 முதல் ரூ.3,55,556 வரை பயிர் இடைவெளிக்கேற்ப) வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரை நுண்ணீர்ப்பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் பண்ணைக்குட்டைகள் அமைக்க, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு 95 சதவீத(தலா ரூ.47,500) மானியமும், இதர விவசாயிகளுக்கு 90 சதவீத மானியமும்(தலா ரூ.45,000) வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைய திருவண்ணாமலை, செங்கம், போளூர், தண்டராம்பட்டு வட்டத்தில் உள்ள விவசாயிகள் உதவி செயற்பொறியாளர்(வேளாண்மை பொறியியல்) எண்.1531, காஞ்சி ரோடு, வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரியிலும், செய்யாறு, ஆரணி, வந்தவாசி வட்டத்திலுள்ள விவசாயிகள் உதவி செயற்பொறியாளர்(வேளாண்மை பொறியியல்) எண் 67, கார்த்திகேயன் சாலை, சைதாப்பேட்டை, ஆரணி என்ற முகவரியிலும் வருகிற 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கலெக்டர் அலுவலகம், அனைத்து தாலுகா அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள வேளாண்மைதுறை மனுப்பெட்டிகளிலும் விண்ணப்பத்தினை வருகிற 31ம் தேதிக்குள் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 04175 232908 என்ற எண்ணில் செயற்பொறியாளர்(வேளாண்மை பொறியியல்) அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.